மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுதான் நான் முன்பே சொன்னேன். தஞ்சையில் மருத்துவக் கல்லூரி இருப்பதன் காரணமாக அதனையொட்டி ஆரம்பிக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

சென்னை நகரில் பாதுகாப்புப் பணி.

*342 வினா--திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் கண்காணிப்புப் பணிக்காக கூடுதலாக காவல் துறைப் பணியாளர்களை நியமிக்க அரசு ஆலோசித்து வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) சென்னை மாநகரில் கண்காணிப்புப் பணிக்காக கூடுதலாக காவல் துறைப் பணியாளர்களை நியமிப்பதுபற்றி அரசு அவ்வப்போது பரிசீலித்து, தேவைக்கேற்ப அனுமதி வழங்கி வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற பெரிய பெரிய நகரங்களில் இன்னும் கூடுதலாக காவலர்களை நியமித்தால் கண்காணிப்புப் பணியை விறுவிறுப்பாக்கலாமே, அதை அரசாங்கம் கருத்திற்கொண்டு பெரிய நகரங்களிலாவது கூடுதல் காவலர்களை நியமிக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூலக் கேள்வி, காவல் துறைப் பணியாளர்களைப் பற்றியது. காவல் நிலையங்களை கூடுதலாக்கினாலும் காவல் துறைப் பணியாளர்களையும்தான் கூடுதலாக்க வேண்டியிருக்கிறது. 1974–75-ம் ஆண்டில், சென்னையில் மாத்திரம் 168 இரண்டாம் நிலை காவலர்கள், 12 முதல் நிலை காவலர்கள், அதற்கேற்ப வேறுபல பணியாளர்களையும் கூடுதலாக நியமிக்க அனுமதி அரசு வழங்கியது. அதைப்போல, மற்ற மாவட்டங்களிலும் தேவைக்கேற்ப அரசு அவ்வப்போது கவனித்து அனுமதிகளை வழங்கிக்கொண்டு வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, மக்கள் தொகை அடிப்படையில் சுமார் 800 மக்கள் தொகைக்கு ஒரு போலீசார் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், நெரிசலுள்ள சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களுக்கு இதிலே வரம்பு ஏதாவது விதிக்கப்பட்டிருக்கிறதா ? இதிலே மாறுதல் ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதிக நெரிசல் சென்னை நகரத்திலே இருக்கும் காரணத்தால், 6—3—1975 நிலவரப்படி, இரண்டாம் நிலை காவலர்கள் 4,097 பேர் இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். முதல் நிலை காவலர்கள் 569 பேர். தலைமைக் காவலர்கள் 733 பேர். சப்-இன்ஸ்பெக்டர்கள் 239 பேர். இதற்கேற்ப

1975 மார்ச் 17]

ஏனைய அதிகாரிகள், நெரிசல் மிகுந்த சென்னை நகரத்தில் மாத்திரம் பணியாற்றிவருகிறார்கள். இதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மற்ற நகரங்களுக்கும், அந்தந்த நகரங்களினுடைய மக்கள் தொகை, குற்றங்கள் இவற்றின் அடிப்படையில் இந்தப் பணியாளர்கள், காவல் நிலையங்கள் இவைகள் விரிவுபடுத்தப்படுகின்றன.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை நகரத்தில் புதிதாக ஒரு காவல் நிலையம் ஏற்படுத்துவதற்கான பரிந்துரை அரசுக்கு வந்துள்ளதா ? அதன்மேல் அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கோவை நகரில் காவல் நிலையம் இருக்கிறது. எந்த இடத்தில் என்று உறுப்பினர் கேட்கவில்லை. அப்படிக் கேட்டாலும் அதற்குத் தனியாகத்தான் விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.

திரு. கு. காமாட்சி : இந்த காவல் பணியாளர்கள் அதிகமாகத் தேவைப்படுகிறபோது, நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற சாரணர் படை, சேரணிப் படை, ஊர்காவல் படை இவைகளையெல்லாம் உபயோகிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காவல் துறையினர் ஈடுபடுகின்ற அதேபோன்ற காரியங்களில் ஈடுபடுத்தாவிட்டாலும், அவர்கள் வேறு பணிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். பாதுகாப்பு போன்ற காரியங்களுக்கும், கூட்டங்களை ஒழுங்குபடுத்துதல் போன்ற காரியங்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தத் தொகுதிகளிலிருந்து அவற்றிலே பணியாற்றுகிறவர்கள் அவ்வப்போது எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Chief Minister the total strength of police force in Madras City including top officers ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மொத்தமாக இல்லை. தனித் தனியாகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் கஷ்டப்பட்டு கூட்டிப் பார்த்துக்கொள்ள வேண்டுகிறேன் :—

கமிஷனர்	1
டெபுடி கமிஷனர்கள்	5
அடிஷனல் டெபுடி கமிஷனர்	1
உதவி கமிஷனர்கள்	23
இன்ஸ்பெக்டர்கள்	71
ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள்	21
டெபுடி இன்ஸ்பெக்டர்கள்	19
சப்-இன்ஸ்பெக்டர்கள்	239

ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள்	71
உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள்	70
ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள்	25
தலைமைக் காவலர்கள்	753
நாயக்ஸ்	167
லான்ஸ் நாயக்ஸ்	155
முதல் நிலை காவலர்கள்	569
இரண்டாம் நிலை காவலர்கள்	4,097

Stock of yarn

* 343 Q.—THIRU N. DENNIS; THIRU N. K. PALANISAMY Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the total quantity of yarn lying in stock with the Mills in this State as on date, district-wise?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 31—12—1974-ல் மாவட்ட வாரியாக ஆலைகளிலுள்ள நூல் இருப்பு பின்வருமாறு:—

மாவட்டங்கள்.	180 கிலோ பேல்கள்.
1. கோயம்புத்தூர்	21,134
2. மதுரை	5,403
3. திருநெல்வேலி	4,595
4. இராமநாதபுரம்	5,144
5. செங்கல்பட்டு	1,000
6. சேலம்	2,866
7. திருச்சிராப்பள்ளி	1,474
8. கன்னியாகுமரி	983
9. வடாற்காடு	647
10. தென்னாற்காடு	513
11. தஞ்சாவூர்	1,139
	44,898

திரு. என். டென்னிஸ்: சார், சர்ப்ளஸ் ஸ்டாக் ஏற்படாமல் இருக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள், சர்ப்ளஸ் ஆக இருக்கின்றவற்றை கிளியர் செய்ய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அறிய விரும்புவதோடு இந்த விநியோக முறையிலே ஏதாவது மாறுதல் தேவையிருக்கிறதா என்பதை அரசு பரிசீலித்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.